தஞ்சை இராஜா மருத்துவ மனை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. என். சுந்தரேசத் தேவர் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை இராஜா மருத்துவமனையில் நோயாளிகட்குத் தேவையான மருந்துகள் கிடைக்காமல் இருப்பது குறித்து அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(இ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) கேள்வி எழாது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அந்த மருத்துவ மனையில் அண்மையில் கொடுக்கப்பட்ட ஊசிகள் காரணமாக சிலர் இறந்துவிட்டதாகப் பத்திரிகையில் செய்தி வந்தது. அதுபற்றிய தகவல்களைத் தெரிவிக்க வேண்டுகிறேன். அப்படி மேலும் நடக்காமலிருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்தக் கேள்வியில் மருந்து கிடைக்கவில்லை என்ற கேள்வி எழுந்தது. மருந்து கிடைக்கிறதென்று பதில் சொல்லியிருக்கிறேன். போடப்பட்ட ஊசிபற்றித் தனியாகக் கேள்வி போட்டால், சரியான பதிலை அறிந்து சொல்ல முடியும்.

Government Erskine Hospital, Madurai.

*5 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(*a*) whether additional technical equipments for the treatment of cancer are to be installed at the Government Erskine Hospital, Madurai; and

(*b*) if so, the details thereof?

மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனை

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைக்காக கூடுதல் தொழில் நுட்பச் சாதனங்கள் நிறுவப்படவிருக்கின்றனவா?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் 60 கோபால்ட் கதிர் வீச்சி நோய் சிகிச்சை இயந்திரக் கருவியை வாங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சேர்த்துச் சொல்ல நான் விரும்புகிறேன். இந்த முயற்சியில் மத்திய அரசு வெளி நாட்டுச் செலாவணிக்கு இசைவு தராததன் காரணமாக, நீண்ட காலமாக தவிர்க்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து அரசு வேறு ஏற்பாடு செய்ய முடியுமா என்று முயற்சிக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்த 'கோபால்ட் தெரபி' தற்சமயம் இந்திய நாட்டில் உற்பத்தியாகிறது. பம்பாயில் ஒரு நிறுவனம் அதை உற்பத்தி செய்து, அந்த 'கோபால்ட்'டையும் உடனடியாகத் தர ஏற்பாடு செய்கிறது. அதனாலே வெளிநாட்டுச் செலாவணி தேவையில்லை என்ற நிலைமை இப்போது உருவாகிறது.

Sir, will the Government consider the installation of Cobalt Therapy Units, instead of Deep X-ray, not only in Madurai Erskine Hospital but also in various other hospitals ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இப்பொழுது மதுரையில் 'டீப்-எக்ஸ்ரே தெராபி யூனிட்' இருக்கிறது. அதுபோல 'கான்சர் கேமோதராபி' முறை பயன்படுத்தப்படுகிறது. 'ரேடியம் நீடில்ஸ்' பயன்படுத்தப்படுகின்றன. அந்த மதுரை மருத்துவ மனை, சென்னைக்குத் தெற்கே இந்தச் சிகிச்சைப் பிரிவு உள்ள ஒரே மருத்துவ மனையாக இருப்பதால் 'கோபால்ட் தெராபி' தேவையெனக் கருதப்பட்டது. அதுவும் இப்போது இந்தியாவிலே கிடைக்குமென்ற சூழ்நிலை இருப்பது 10 நாட்களுக்கு முன்னர் எனக்குத் தெரியவந்தது. அதுபற்றி ஆராய்ந்து வருகிறோம். முடிந்த வரையில் அதைப் பொறுவதற்கு முயற்சிப்போம்.

THIRU G. SWAMINATHAN : Sir, is the Hon. Minister aware of the fact that the Deep X-ray Therapy Unit is not functioning in Madurai Erskine Hospital during the last one year?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, whenever an equipment is not functioning in any hospital, that fact does not usually come to the notice of the Minister unless an hon. Member who is much interested in that brings it to the notice of the Hon. Minister or the Government Department.